இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

ஆகஸ்டு 24 ஞாயிறன்று துன்புறும் உக்ரைன் நாட்டிற்காக செபிப்பதற்காக, “உக்ரைனுக்காக உலகளாவிய செபம்” என்ற புதிய ஆன்மிக முயற்சியை ஆரம்பித்துள்ள மக்களுடன் இணைந்து, துன்புறும் அந்நாட்டிற்கு இறைவன் அமைதியை வழங்க செபிப்போம் – திருத்தந்தை.

# வன்முறையால் பாதிக்கப்பட்ட மொசாம்பிக் பகுதி மக்களுக்கு திருத்தந்தையின் செய்தி



வத்திக்கான் வளாகத்தில் கூடியிருந்த மக்கள் (ANSA)

பாதுகாப்பற்றச் சூழல் மற்றும் வன்முறையினால் ஏராளமான உயிரிழப்புக்களையும், இடம்பெயர்வுகளையும் அனுபவித்து வரும் மொசாம்பிக்கின் கபோ டெல்கதோ மக்களுக்குத் தனது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

ஆகஸ்டு 24, ஞாயிறன்று வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு வழங்கிய ஞாயிறு மூவேளை செப உரையின் இறுதியில் எடுத்துரைத்த செப விண்ணப்பங்களின்போது இவ்வாறு எடுத்துரைத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

வன்முறை மற்றும் இடம்பெயர்வுகளால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களை நாம் மறந்துவிடக்கூடாது என்று வலியுறுத்தி, பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்காகவும் செபிக்கக் கேட்டுக்கொண்ட திருத்தந்தை அவர்கள், நாட்டில் பாதுகாப்பையும், அமைதியையும் மீட்டெடுப்பதற்காக நாட்டின் தலைவர்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும் என்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

ஆகஸ்டு 22, வெள்ளிக்கிழமையன்று, போர்களால் பாதிக்கப்பட்ட சகோதர சகோதரிகளுக்காக செபித்து, செபம் மற்றும் நோன்பிற்கான நாளை அனுசரித்ததை நினைவுகூர்ந்த திருத்ததை அவர்கள், ஆகஸ்டு 24, ஞாயிறன்று துன்புறும் உக்ரைன் நாட்டிற்காக செபிப்பதற்காக, “உக்ரைனுக்காக உலகளாவிய செபம்” என்ற புதிய ஆன்மீக முயற்சியை ஆரம்பித்துள்ள மக்களுடன் இணைந்து, துன்புறும் அந்நாட்டிற்கு இறைவன் அமைதியை வழங்க செபிப்போம் என்றும் எடுத்துரைத்தார்.

உரோம், இத்தாலி மற்றும் உலகின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்த திருப்பயணிகள் அனைவரையும் வாழ்த்திய திருத்தந்தை அவர்கள், கூடியிருந்த அனைவரையும் வாழ்த்தி தனது செப விண்ணப்பங்களை நிறைவு செய்தார்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# இயேசுவின் சிறந்த சீடர்களாக நாம் மாற வேண்டும் – திருத்தந்தை


பிரெஞ்சு பீடப்பணியாளர்களுடன் திருத்தந்தை பதினான்காம் லியோ (@Vatican Media)

**தனது வாழ்வில் ஒவ்வொரு நாளும் கடவுளை தனிப்பட்ட முறையில், விதிவிலக்கற்ற முறையில் சந்தித்து, அவரை உலகிற்குக் கொடுக்கும் அருள்பணியாளரின் வாழ்க்கையானது, அழகானது, அற்புதமானது - திருத்தந்தை**

கடவுள் தன்னை அன்பினால் நமக்கு மீண்டும் மீண்டும் கொடுக்கும் நேரம் திவ்ய நற்கருணை வழிபாடு என்றும், எதிர்நோக்கின் திருப்பயணிகள் ஆண்டில் நாம் கடவுளிடம் திரும்பி வரவும், நம்பிக்கையிலும் அன்பிலும் வளரவும், சிறந்த சீடர்களாக மாறவும் இறைவன் நமக்கு உதவுகிறார் என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

ஆகஸ்ட் 25, திங்களன்று வத்திக்கானின் கிளமெந்தினா அறையில், பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்திருந்த திருவழிபாட்டுப் பீடப்பணியாளர்கள் ஏறக்குறைய 360 பேரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

நம்மைச் சுற்றியுள்ளவர்கள் துன்பம், நோய், இயலாமை, தோல்வி, இறப்பு ஆகியவற்றால் பாதிக்கப்படும்போதும், சோதனையை எதிர்கொள்ளும்போதும், துயரத்தால் நம் இதயம் பதட்டம் நிறைந்ததாக இருக்கும்போதும், அச்சூழலில் இயேசு மட்டுமே நம்மைக் காப்பாற்ற வருகிறார், வேறு யாரும் அல்ல என்றும், ஏனெனில் அவருக்கு மட்டுமே அந்த ஆற்றல் இருக்கிறது என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

நற்கருணை என்பது திருஅவையின் புதையல், புதையல்களுக்கு எல்லாம் மேலான புதையல் என்றும், திருப்பலி கொண்டாட்டம் இன்று நம்மையும் நாம் வாழும் உலகையும் காப்பாற்றுகிறது என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

எதிர்நோக்கின் திருப்பயணிகள் ஆண்டில் நாம் கடவுளிடம் திரும்பவும், நம்பிக்கையிலும் அன்பிலும் வளரவும், சிறந்த சீடர்களாக மாறவும் இறைவன் நமக்கு உதவுகிறார் என்றும், இதனால் நம் வாழ்க்கை அவரது பார்வையில் அழகாகவும் நல்லதாகவும் இருக்கின்றது நிலையான வாழ்வை நம்மால் பார்க்க முடிகின்றது என்றும் கூறினார் திருத்தந்தை.

கடவுள் தன்னை அன்பினால் நமக்கு மீண்டும் மீண்டும் கொடுக்கும் தருணமே திவ்ய நற்கருணை வழிபாடு என்றும், இத்திருப்பலிக்கு, கிறிஸ்தவர்கள் கடமைக்காக செல்வதில்லை, மாறாக அவர்களுக்கு அது முற்றிலும் தேவைப்படுவதால் செல்கின்றார்கள் என்றும் கூறினார்.

கைம்மாறு கருதாது தனது உயிரை நமக்காகக் கையளித்த கடவுள் தங்களது வாழ்க்கைக்குத் தேவை என்று கிறிஸ்தவர்கள் உணர்ந்ததால் திருப்பலியில் பங்கேற்கின்றார்கள் என்றும் திருப்பலி என்பது கொண்டாட்டம் மற்றும் மகிழ்ச்சிக்கான நேரமாக இருக்கும் அதேவேளையில், கடவுளின் அருளை நம்மை நோக்கி ஈர்க்கும் ஒரு தீவிரமான, புனிதமான தருணம் என்று சுட்டிக்காட்டினார் திருத்தந்தை.

பீடப்பணியாளர்கள் தங்களது செயல்கள், அமைதி, பணி, மாண்பு, வழிபாட்டின் அழகு, அடையாளச்செயல்கள் போன்றவற்றால், நம்பிக்கையுள்ள மறைபொருளின் புனிதத்திற்குள் அனைவரையும் கொண்டு சேர்க்கட்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை.

பிரான்சில் நிலவும் அருள்பணியாளர்களுக்கான பற்றாக்குறையானது தலத்திருஅவைக்கும், நாட்டிற்குமான துரதிர்ஷ்டம் என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், அழைத்தலின் மேன்மையை, அழகை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளவேண்டும் என்றும், தனது வாழ்வில் ஒவ்வொரு நாளும் கடவுளை தனிப்பட்ட முறையில், விதிவிலக்கற்ற முறையில் சந்தித்து, அவரை உலகிற்குக் கொடுக்கும் அருள்பணியாளரின் வாழ்க்கையானது, அழகானது, அற்புதமானது என்றும் எடுத்துரைத்தார்.

பீடப்பணியாளர்களின் எண்ணிக்கையும், அவர்களது நம்பிக்கையும், எதிர்நோக்கின் அடையாளமாகவும் மிகப்பெரிய ஆறுதலாகவும் இருக்கின்றது என்று வாழ்த்திய திருத்தந்தை அவர்கள், துணிவுடன் விடாமுயற்சியுடன் இருங்கள், பீடப்பணியாளராக பணியாற்றும்போது கிடைக்கும் பெருமை மற்றும் மகிழ்ச்சியை சான்றுகளாக சுற்றியுள்ள மக்களுக்குக் கொடுங்கள் என்றும் வலியுறுத்தினார்.

மெரினா ராஜ் – வத்திக்கான்

# மறைக்கல்விப் பயிற்சியில் எனது அனுபவம்



மாமறைமாவட்ட மறைக்கல்வி பணிக்குழு (Archdiocesan Catechetical Ministry) ஏற்பாட்டில் கத்தோலிக்க மறைபோதகர்களுக்கு பயிற்சி ஒன்று நடைப்பெற்றது. அதில் மறைபோதகர்கள் மட்டுமல்லாமல் ஆர்வம் மிக்கவர்களும், மறைபோதகர்கள் அல்லாத தன்னார்வாளர்களும் கலந்துக் கொண்டனர். இந்த பயிற்சி 3 நாள்களுக்கு நடைபெற்றது. இந்த பயிற்சியில் கலந்துகொள்வதற்கு முன்பு மறைபோதகம் என்றால் என்னுடைய புரிதல் இறைவனை பற்றி போதித்தல் ஆகும். ஆனால் மறைபோதகம் போதிப்பது மட்டுமல்லாமல் நாம் எவ்வாறு மறைக்கல்வி மாணவர்களை அணுகுவதும் அவர்களை கடவுளின் பாதையில் இட்டுச்செல்வதற்கும் மறைபோதகர்கள் ஒரு முக்கிய பங்காற்றுகிறோம் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

குருத்துவம் மட்டுமே இறைவனின் அழைப்பு என்று நினைத்து கொண்டிருந்த நான் மறைபோதகமும் ஒரு இறையழைத்தல் என்பதை நன்குப் புரிந்து கொண்டேன். முன்பு போல் அல்லாமல், மறைபோதகப் பணியை அலட்சியமல்லாமல் இறை அச்சத்தோடும் நல்ல பொறுப்புணர்ச்சியோடும் இப்பணியைச் செய்ய இந்த பயிற்சி ஒரு நல்ல தூண்டுகோலாக அமைந்தது. இந்த பயிற்சியில் பங்கேற்ற அனைத்து பயிற்சியாளர்களும் (presenter) அவரவர்களின் பொறுப்பைச் சிறப்பாக செய்து முடித்தனர். ஒரு நல்ல அனுபவமிக்க மறைபோதக பயிற்சியாளர்களாக அவர்களுடைய அனுபவத்தையும் எங்களோடு பகிர்ந்து கொண்டு ஒரு நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

மத்தேயு 13:3-9, இறை வசனத்தை மறைபோதகர்கள் எவ்வாறு பார்க்க வேண்டும் என்பதை தெளிவு படுத்தினார்கள். இயேசு விதைத்த விதைகள் நல்ல நிலத்தில் விழுந்து சில நூறு, அறுபது மற்றும் முப்பது மடங்காக பலன்களைக் கொடுப்பது போல மறைபோதக ஆசிரியையான நானும் போதிக்கின்ற இறை வார்த்தை மாணவர்களின் மனதில் பதியவைக்கவும், அதனை அவர்களின் வாழ்க்கையில் தொடர்ந்து கடைப்பிடிக்கவும், இறை அனுபவத்தோடு பயணிக்கவும், அதற்கு நான் வழிகாட்டியாக திகழ வேண்டும் என்பதையும் புரிந்துக் கொண்டேன்.

மேலும் இது போன்ற பயிற்சி இன்னும் அதிக மறைபோதகர்களை சென்றடைய வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன். அதன் மூலமாக நிறைய மறைபோதகர்கள் பயனடைவது மட்டுமல்லாமல் கனி கொடுக்கின்ற இறை விசுவாசிகளை வளர்த்தெடுக்கக்கூடிய நல்லாயர்களாய் நாளும் திகழ்ந்திட வேண்டுகிறேன்.

ஷீலா எலிசபெத் மத்தியூஸ்

# மலாக்கா–ஜோகூர் மறைமாவட்டத்தின் (MJD) தொழில்முறை தர நிர்ணய அலுவலகத்தின் (PSO) ஏற்பாட்டில், குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், திரு அவையில் குழந்தை பாதுகாப்பு நடைமுறைகள் குறித்த புரிதலை வலுப்படுத்தவும் பட்டறை ஒன்றினை நடத்தியது.



மலாக்கா–ஜோகூர் மறைமாவட்டத்தின் (MJD) தொழில்முறை தர நிர்ணய அலுவலகத்தின் (PSO) ஏற்பாட்டில், குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், திரு அவையில் குழந்தை பாதுகாப்பு நடைமுறைகள் குறித்த புரிதலை வலுப்படுத்தவும் பட்டறை ஒன்றினை நடத்தியது.

இந்த ஒரு நாள் பணிப்பட்டறையில் மறைமாவட்டம் முழுவதிலும் இருந்து தமிழ்ப் பங்குகளைச் சேர்ந்த 28 மறைக்கல்வி ஆசிரியர்கள், பங்குகளில் இயங்கும் பணிக்குழு தலைவர்கள் மற்றும் பங்குப் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். சிறுவர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய நபர்களைப் பாதுகாப்பதில் திரு அவை கொண்டுள்ள உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாகவே இந்தப் பயிற்சி அமைந்தது.

தொழில்முறை தர நிர்ணய அலுவலகத்தின் பங்கு மற்றும் செயல்பாடு பற்றிய அறிமுகம் மற்றும் அமர்வுக்கான வருகை கண்காணிப்பு குறித்த விளக்கத்துடன் இந்நிகழ்வு தொடங்கியது. பணிப்பட்டறையின் முதல் அமர்வில், முன்னால் காவல் கண்காணிப்பாளர் துணை சூப்பிரண்ட் திருமதி மேரி ஹென் ஆரோகியதாஸ் அவர்கள் பாலியல் வன்முறை விழிப்புணர்வு, துன்புறுத்துதல் மற்றும் அதனைத் தடுக்கும் அடிப்படைகள் குறித்து ஒரு பயனுள்ள விளக்கத்தை வழங்கினார். 'ராயல் மலேசியா' காவல்துறையில், குறிப்பாக போதைப்பொருள் எதிர்ப்பு மற்றும் உளவுத் துறைகளில் தனது 41 ஆண்டுகால அனுபவங்களை மையமாகக் கொண்டு சிறார் கொடுமைகள் குறித்து அனைவரிடம் பகிர்ந்துக் கொண்டார். அவருடன், ராடிங் பல்கலைக்கழக (மலேசியா) சட்டத்துறைத் தலைவர் இணை பேராசிரியர் ஹென் வர்கிஸ் அவர்கள், குழந்தைகள் பாதுகாப்புச் சட்டத்தின் முக்கியக் கொள்கைகளைக் குறித்து வலியுறுத்தினார்.

இரண்டாவது அமர்வில், முன்னாள் தாதியர் திருமதி ஜாக்குலின் ஆண்டனி மற்றும் மனநல நிபுணரும் மோனாஷ் பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளருமான டாக்டர் ஃபேபியன் தாஸ் ஆகிய இருவரும் பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் உடல் மற்றும் மனநல பாதிப்புகளும் விளைவுகளையும் குறித்து விளக்கினர். அவர்கள் முன்கூட்டியே மனநல சேவைகள் வழங்கப்படுவதின் அவசியத்தைப் பற்றி அனைவருக்கும் விளக்கம் அளித்தனர்.

மதிய உணவு இடைவேளையைத் தொடர்ந்து, PSO மற்றும் ஆயரின் பிரதிநிதியும், வழக்கறிஞரும் வழக்குரைஞருமான டீக்கன் அந்தோனி சுவாவின் விளக்கத்துடன் பட்டறை மீண்டும் தொடங்கியது. அவர் பங்கேற்பாளர்களுக்குக் குழந்தை சட்டம் 2001, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் சட்டம் 2017 மற்றும் கட்டாய அறிக்கை பொறுப்புகள் உள்ளிட்ட சிறார் கொடுமைகளுக்குத் தொடர்புடைய தேசிய சட்டங்கள் பற்றிய ஆழமான விளக்கத்தை வழங்கினார். சிறார்களைப் பாதுகாப்பதிலும், சிறார் பாலியல் வன்முறை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வழக்குகளில் உடனடி நடவடிக்கையை உறுதி செய்வதிலும் திரு அவையின் இரட்டை பொறுப்புகளைப் பற்றிய ஒரு தெளிவான விளக்கத்தைக் கூறினார்.

இறுதியாக கூலாய் ஜோகூர் கிறிஸ்து அரசர் தேவாலயத்தின் பங்கு குருவானவர் ஜேம்ஸ் ராஜேந்திரன் அவர்கள் மலாக்கா ஜோகூர் மறைமாவட்டத்தில் தமக்கு கிடைக்கப் பெற்ற அனுபவத்தின் மூலம் பங்குகளில் பின்பற்ற வேண்டிய புகார் பதிவு முறைகள், சரியான ஆவணங்களின் முக்கியத்துவம், செயல்முறை கண்டிப்பிற்கும் ஆன்மீக பராமரிப்பிற்கும் இடையிலான சமநிலையை குறித்து விளக்கினார்.

இந்தப் பணிப்பட்டறை கேள்வி–பதில் அமர்வுடன் நிறைவடைந்தது. பங்கேற்பாளர்கள் தங்கள் பங்குகளில் குழந்தைகள் பாதுகாப்பிற்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தினர்.

மலாக்கா–ஜோகூர் மறைமாவட்ட ஆயர் பெர்னார்ட் போல் அவர்கள் 2017-ஆம் ஆண்டில் நிறுவிய தொழில்முறை தரநிலைகள் அலுவலகம் (PSO), இன்றும் சமூக நலனுக்காக செயற்பட்டு வருகிறது. பாப்பரசரின் உலகளாவிய அழைப்பின் பேரில் தொடங்கப்பட்ட இந்த அலுவலகம், திருச்சபையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் வலுப்பெற முக்கிய பங்காற்றுகிறது. இதில் சட்டம், உளவியல் மற்றும் மேய்ப்புப் பணிகள் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் இணைந்து செயல்படுகின்றனர். பாதுகாப்பான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் உருவாக்கப்படுவதில், இவர்கள் ஒருங்கிணைந்து அயராது உழைத்து வருகின்றனர். இதன் மூலம் மறைமாவட்டத்தில் பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை மேலும் வலுப்பெறுகிறது.

## புனித சவேரியார் பங்கின் புனித யாத்திரை



மலாக்கா, புனித சவரியார் பங்கு விசுவாசிகள் சிலுவை பயண யாத்திரை மேற்கொண்டனர். அருள்பணியாளர் தேவதாசன் அவர்களின் தலைமையில் 16.8.2025 குளுவாங் புனித பிரகாசியார் பங்கு வந்து சேர்ந்தனர்.

காலை சிற்றுண்டிக்குப் பின் தபசு காலத்தில் சிலுவை பாதையானது ஒரு விதம் ஆனால் இயேசு உயிர்த்த பின்பு சிலுவை பயணம் என்பது வேருவிதமான அனுபவம். அதைத்தான் இப்பொழுது வாசித்து தியானித்தோம் என நடத்துனர் சகோ.சிசிலியா தெரிவித்தார்.

சுமார் ஐம்பது பேர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் இறுதி ஆசீர்வாதம் வழங்கி அடுத்து தங்களது யாத்திரை பயண தொடரை ஜொகூர் நோக்கி சென்றனர்.

செய்தி: ஆவி.டேவிட்.

## ஆண்டின் பொதுக்காலம் 23 ஆம் ஞாயிறு – 07-09-2025

சாலமோனின் ஞானநூல்: 9:13-18;
திருப்பாடல்: 90: 3-6, 12-14, 17;
பிலமோன்: 9-10, 12-17; லூக்கா 14: 25-33

### ஞானத்தினால் கடவுளுக்கு உகந்தவர்களாக வாழ்வோம்.

கிறிஸ்துவில் அன்பார்ந்தவர்களே, இன்றைய ஞாயிறு வாசகங்கள் மூன்றுவிதமான கருத்துகளைக் கொண்டிருந்தாலும், அவற்றின் நோக்கம் ஆண்டவரையே நாம் முழுமுதற் செல்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நமக்குக் கூறுகிறது.

முதல் நூலான சாலமோனின் ஞானநூலில் ஞானத்திற்கு பெயர்பெற்ற சாலமோன் அரசர் இவ்வாறு கூறுகிறார். நம்முடைய சிறிய அறிவிற்கு கடவுளைப் பற்றி அறிந்துகொள்ளமுடியாது. நம்முடைய சொந்த உடலைப் பற்றியும் கூட நம்மால் கணிக்கமுடியாது. அதிலும் நம்மைச் சுற்றியுள்ள மண்ணுலகையே அறியமுடியாதபோது விண்ணுலகையும் அதில் உள்ளவற்றையும் நம்மால் அறிந்துகொள்ளமுடியுமா? இதற்காகத் தான் நமக்கு ஞானத்தை அருளுமாறு தூய ஆவியாரை நாம் மன்றாடவேண்டுமென்று நூல் ஆசிரியர் கூறுகிறார். எனக்கு எல்லாம் தெரியுமென்று நாம் பலவேளைகளில் நம்மை நினைத்து பெருமைப்பட்டுக்கொள்வோம். ஆனாலும் நம்முடைய திட்டங்கள் தவறக்கூடியவை என்று முதல் வாசகம் நமக்கு நினைவூட்டுகின்றது. எல்லாமே ஒரு நாள் ஒன்றுமில்லாமல் போய்விடும். அப்போது எது தான் நிலைத்து நிற்கும். ஆண்டவரிடம் கொள்ளும் அச்சத்தாலும், ஞானத்தாலும் அழியா மீட்பை அடையமுடியும்.

நாம் ஞானத்தைத் தேடும் மக்களாக, இறைவனை புகலிடமாகக் கொண்டால் கடவுளின் இன்னருள் நம்மீது தங்கும் என்றும் நாம் செய்யும் அனைத்திலும் வெற்றியை அடைவோம் என்றும் திருப்பாடல் ஆசிரியர் ஆண்டவரிடம் புகலிடம் காண்கிறார். ஒவ்வொரு நாள் காலையும் ஆண்டவரின் பேரன்பால் நம்முடைய வாழ்நாள் தொடங்க வேண்டுமென்று அவர் ஆசிக்கின்றார். ஆம் அன்பார்ந்தவர்களே, நாமும் நம் நாளின் தொடக்கத்தை இவ்வாறு ஆண்டவருடைய அன்பாலும், இன்னருளாலும் தொடங்கினால் இடர்வரினும் அதை இன்பமாகவே தாங்கிக்கொள்வோம்.

இன்றைய இரண்டாம் வாசகம் பிலமோன் என்னும் பவுலடியாரின் சீடருக்கு எழுதப்பட்டது. இவற்றில் நாம் காணும் முக்கியமான பண்பு, ஒரு அடிமையாகிய ஓனேசிமை தம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொண்டு அவருக்காக பிலமோனிடம் பரிந்து பேசும் ஒரு கடிதத்தை நாம் காண்கிறோம். ஆண்டவரின் முன்னிலையில் நாம் அனைவரும் அவரின் சுவீகாரப்பிள்ளைகள், இயேசு கிறிஸ்துவின் விலைமதிப்பற்ற தூய இரத்தத்தினால் விலை கொடுத்து வாங்கப்பட்ட நம்மிடையே அடிமை என்றும் மேன்மக்கள் என்றும் இல்லை. இன்றைய காலகட்டதிலும் பிரிவினை அல்லது ஏற்றத்தாழ்வு என்பது சாதியினாலும், பொருளாதாரத்தாலும், கல்வியாலும் நம்மிடையே கலந்துள்ளது. ஆண்டவரை முழுமனதோடு நம் மீட்பராக ஏற்றுக்கொண்டோமென்றால், நம் எண்ணத்திலும், செயலிலும், நாம் அனைவரும் இறைவனின் முன்னிலையில் சமம் என்றும் திருஅவையில் நாம் அனைவரும் ஒன்றிப்பின் மக்கள் என்றும் வாழலாம்.

இன்று நாம் சிந்தனைக்கு எடுத்திருக்கும் ஞானத்தை நம் ஆண்டவர் இயேசு நற்செய்தியிலும் அதைப் பற்றி விவரிக்கிறார். முதலில் அவருடைய சீடராக இருக்கும் நம்மை, நம் அன்றாட துன்பங்களையும் ஏற்றுக்கொண்டுதான் அவரைப் பின்பற்றவேண்டுமென்று அழைக்கிறார். மேலும் ஒரு திட்டம் தீட்டி அதைச் செயல்படுத்திட ஞானம் எவ்வளவு முக்கியம் என்பதை இரண்டு உவமைகளின் மூலம் கூறுகிறார். கோபுரம் கட்டவிரும்புகிறவர் தன்னிடம் அதற்கான பொருள் வசதி இருக்கிறதா எனத் திட்டமிடுவார். அதேபோல எதிரி அரசனை போரில் வெல்ல அவனை விட வலிமையான படை இருக்கவேண்டும். இல்லையென்றால் அவனிடம் சமாதானம் செய்வதே ஞானம் என்று இயேசு கூறுகிறார்.

இன்றைய வாசகங்கள் அனைத்தும் உலக வாழ்க்கையை இறைவனின் விருப்பத்தின்படி வாழவும், மேலுலகு சார்ந்தவற்றை நாடவேண்டுமென்றால் அதற்குரிய ஞானத்தை, தூய ஆவியாரின் கொடைகளை நாம் இறைஞ்சிமன்றாட வேண்டுமென்று கற்றுக்கொள்கிறோம். இறைவனிடம் கொள்ளும் அச்சமே ஞானம். அந்த ஞானத்தை கேட்டு, பெற்று, மீட்பு பெறுவோம்.

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.